பக்கங்கள்:-21

# காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 17 | சனிக்கிழமை | 03.01.2026 | அதிர்வு 156 |
|---|---|---|---|---|---|


## மாகாணத் தேர்தல் மொட்டுத் தயாராம்!



மாகாண சபைத் தேர்தலை இந்த ஆண்டு நடத்துவதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. தேர்தலுக்கு நாங்கள் தயாராகவே உள்ளோம். 06



# அரசு தனக்குத் தானே காலை வாருகின்றது!

## நாமல் ராஜபக்ஷ நையாண்டி

**அரசாங்கத் தரப்பை எதிர்க்கட்சி குறைமதிப்பிற்கு உட்படுத்துவதற்குப் பதிலாக, அரசாங்கம் 'தனது சொந்தக் கால்களை தானே வாரி விட்டுக்கொண்டு' பழியை எதிரணிப் பக்கம் போட முயற்சிக்கின்றது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (மொட்டு) கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ நேற்றுக் கூறினார்.** 06

# ஐ.தே.க. - ஐக்கிய மக்கள் சக்தி இணைவு விரைவில் நடக்கும்!

## சஜித் அணி தரப்பிலிருந்து நேற்று உற்சாக அறிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் இணைவை முழு நாடும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அந்த எதிர்பார்ப்பு வெகுவிரைவில் நிறைவேற்றப்படும். மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் போது எமது இரு கட்சிகளினதும் இணைவின் ஊடாக அரசாங்கத்துக்கு எதிரான பலத்தைக் காண்பிப்போமென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று 06






இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் தமிழர்களின் பூர்வீகத் தாயகப் பகுதிகளை அரச படைகள் ஆக்கிரமித்து வைத்திருந்த சமயத்தில், அதற்குள் புகுந்து பௌத்த – சிங்களப் பேரினவாதிகள் தம் இஷ்டப்படி ஆக்கிரமிப்பு நடவடிக்கையாக மக்களின் காணியில் கட்டியதே தையிட்டி விகாரை என்ற உண்மை தென்னிலங்கைக்குப் புலப்படத் தொடங்கியுள்ள சமயத்தில் இன்று அந்த விடயத்துக்கு எதிரான மக்கள் எதிர்ப்பு சூடு பிடிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதுவும் பௌத்த பிக்குகள் சிலரே – நயினாதீவு விகாரையின் விகாராதிபதி மற்றும் யாழ்ப்பாணம் நாக விகாரை விகாராதிபதி போன்றவர்களே – உண்மையை உணர்ந்து, ஏற்று, தாமாகவே வெளிப்படுத்த முன் வந்த சூழ்நிலையில், அந்தச் செய்தி தென்னிலங்கைக்கு நியாயத்தை – உண்மையை – நீதியை – எடுத்துரைக்கும் விவகாரமாக மாறி வருவதும் கண்கூடு.

ஆனால், இந்த விடயத்தில் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கையைக் கண்டித்து தொடர்ந்து 06



# வருடத்தின் முதல் நாள் கடற்றொழில் கட்டைக்காட்டில் ஆரம்பித்துவைப்பு

(மரியசீலன் திலைக்ஸ்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் நேற்று நாள் கடற்றொழில் ஆசிர்வாதத்துடன் கடலில் இறக்கப்பட்டது.

வருடத் திருப்பலியின் போது குலுக் கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட – அதே பிரதேசத்தை சேர்ந்த –.பேதுருப் பிள்ளை அன்ரனி விமலதாஸ் இந்த வருடத்திற்கான நாள் தொழிலை கட்டைக் காடு மக்கள் சார்பாக முதன் முதலாக ஆரம்பித்து வைத்தார்.

பங்குத்தந்தை வசந்தன் அடிகளாரின் ஆசீர்வாதத்துடனும் ஊர்மக்களின் ஆதரவுடனும் நேற்றுக் காலை 08.10 மணியளவில் நாள் தொழில் கடலில் இறக்கப்பட்டது.

இதன் பிறகு ஏனைய மீனவர்களின் படகுகள் ஒவ்வொன்றாக தங்களுடைய மீன்பிடி நடவடிக்கைகளை இனிதே ஆரம்பித்தன.

இந்த நிகழ்வில் பங்குத்தந்தை, கிராம மக்கள். கட்டைக்காடு கடற்றொழில் சங்க நிர்வாகத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.









# கூமாங்குளம் கிராம அலுவலர் அலுவலகம் பிரதி அமைச்சரால் நேற்றுத் திறந்து வைப்பு

(கி.வசந்தன்)

புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வவுனியா, கூமாங்குளம் கிராம அலுவலர் அலுவலகம் நேற்றுக் கூட்டுறவுத் துறை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா, கூமாங்குளம் கிராம அலுவலர் அலுவலகமானது 15 லட்சம் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டது. புனர் நிர்மாண வேலைகள் நிறைவடைந்த நிலையில் மக்கள் பாவனைக்காக அது திறந்து வைக்கப்பட்டது.

கிராமசேவையாளர் என்.ஸ்ரீதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், பிரதேசசபையின் தவிசாளர் பா.பாலேந்திரன் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள், கிராம மக்கள், முன்பள்ளி மாணவர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

















# தையிட்டி விகாராதிபதியுடன் யாழ் அரசாங்க அதிபர் பேச்சு

தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி ஜின் தோட்டை நந்தாராம தேரரை யாழ் . மாவட்ட செயலர் ம. பிர தீபன் இன்றைய தினம் வெள்ளிக் கிழமை தையிட்டி விகாரையில் நேரில் சந்தித்து கலந்துரையாடினர்.

கடந்த 31ஆம் திகதி தையிட்டி விகாரைக்காக காணிகளை இழந்த வர்களை மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடியதன் தொடர்ச்சியாக தையிட்டி விகாரதிபதியை இன்றைய தினம் சந்தித்ததாக மாவட்ட செயலர் தெரிவித்தார்.





# பதினொரு இந்திய மீனவர்கள் கைது!





**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

இலங்கை கடற்படையினர், நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு யாழ்ப்பாணம் காரைநகர் கோவிலான் பகுதிக்கு அருகில் உள்ள இலங்கை கடற்பரப்பில் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, உள்ளூர் கடற் பரப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக் கைகளில் ஈடுபட்டிருந்த ஓர் இந்திய மீன்பிடி படகுடன் பதினொரு இந்திய மீனவர்களைக் கைது செய்தனர்.

வடக்கு கடற்படை கட்டளைப் பிரிவு, யாழ்ப்பாணம் காரைநகர் கோவிலான் பகுதிக்கு அருகில் உள்ள உள்ளூர் கடல் எல்லைக்குள் வியாழக்கிழமை நுழைந்து சட்டவிரோத மீன்பிடி நட வடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பல இந் திய மீன்பிடி படகுகளைக் கண்காணித் தது, மேலும் அந்த மீன்பிடி படகுகளை நாட்டின் கடல் எல்லையிலிருந்து அகற்ற வடக்குக் கடற்படை கட்டளைப் பிரிவுடன் இணைக்கப்பட்ட கப்பல்களால் ஒரு சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

அந்த நேரத்தில், இலங்கை கடற் படை உள்ளூர் கடல் எல்லையில் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டிருந்த ஓர் இந்திய மீன்பிடிப் படகில் சட்டப்பூர்வமாக ஏறி ஆய்வு செய்ததுடன், மேலும் எல்லைச் சட்டங்களை மீறி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இந்திய மீன்பிடி படகுடன் பதினொரு இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினரால் கைப்பற்றப் பட்ட இந்திய மீன்பிடி படகுடன் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மேல திக சட்ட நடவடிக்கைகளுக்காக மைலடி மீன்வள ஆய்வாளரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டது.





# காதலியார் சம்மளங்குளப் பகுதியில் அடாவடித்தனமாக கற்குவாரி அமைக்க முயன்றால் போராட்டம் வெடிக்கும்

## ரவிகரன் எம்.பி. சீற்றத்துடன் எச்சரிக்கின்றார்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட காதலியார் சம்மளங்குளம் கிராமத்தில் மக்களின் விருப்பிற்கு மாறாக கற்குவாரி ஒன்றை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என அப்பகுதி மக்களால் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையிடப்பட்டது.

இந்நிலையில் அந்தப் பகுதிக்கு நேற்று நேரடியாகச் சென்று நிலைமைகளை ஆராய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், மக்களின் விருப்பிற்கு மாறாக காதாலியார் சம்மளங்குளத்தில் கற்குவாரி அமைக்கப்பட்டால் மக்களோடு இணைந்து பாரிய போராட்டம் முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

காதலியார் சம்மளங்குளம் பகுதியில் கடந்த 2018 ஆம் ஆண்டு கற்குவாரி ஒன்றை அமைத்து, பாறைகளை வெடிவைத்து தகர்த்து அகழ்வுசெய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன எனவும், அதனைத் தொடர்ந்து கிராம மக்களின் எதிர்ப்பினால் அந்தக் கற்குவாரி கடந்த 2022ஆம் ஆண்டு மூடப்பட்டதாகவும் அப்பகுதி மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

இந்நிலையில் தற்போது மீண்டும் அங்கு கற்குவாரி ஒன்றௌ அமைந்து, கற்களை அகழ்வதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என மக்களால் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரியப்படுத்தப்பட்டது.

ஏற்கனவே கற்குவாரி அமைக்கப்பட்டதனால் ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து தாம் மீளுவதற்கு முன்பாக மீண்டும் கற்குவாரி அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை தமக்கு கவலையளிப்பதாகவும் மக்கள் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தனர்.

குறிப்பாக ஏற்கனவே கல் அகழப்பட்ட குழியினுள் தமது கால்நடைகள் தவறி வீழ்ந்து இறக்கின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக இதன்போது கிராம மக்கள் சுட்டிக்காட்டினர்.

அத்தோடு கடந்த காலத்தில் அங்கு இயங்கிய கற்குவாரியில் கல் உடைப்பதற்காக வெடிவைக்கின்றபோது ஏற்படுகின்ற அதிர்வுகளால் காதலியார் சம்மளங்குளம் கிராமத்திலுள்ள பல வீடுகளின் சுவர்களிலும், ஜன்னல் கண்ணாடிகளிலும், கிணற்றுக் கட்டுகளிலும் வெடிப்புக்கள் ஏற்பட்டன எனவும் கிராமமக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரியப்படுத்தியமையுடன், நேரடியாகவும் காண்பித்தனர்.




அதேவேளை இந்தப் பகுதியில் கற்குவாரி அமைத்து கல் அகழ்வு மேறகொள்ளப்பட்டதன் பிற்பாடு தமது கிராமத்திலுள்ள கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளதாகவும் கிராம மக்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் கற்குவாரி அமைக்கப்பட்டால், அதனால் ஏற்படும் அதிர்வுகளாலும், வெளிப்படும் தூசியினாலும் கிராமத்திலுள்ள மூச்சுத்திணறல் நோயாளிகள், சிறுநீரக நோயாளிகள் மற்றும் இருதய நோயாளிகள் பாதிக்கப்படுகின்றமையுடன், கர்ப்பிணித் தாய்மார்கள், சிறார்களும், முதியோரும் அதிக பாதிப்புக்களுக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்படுமெனவும் கிராமமக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முறையிட்டனர்.

எனவே தமது கிராமத்திற்கு பல்வேறு வழிகளிலும் பாதிப்பாக அமைகின்ற கற்குவாரியை, மீண்டும் தமது கிராமத்தில் அமைக்க எடுக்கப்படுகின்ற முயற்சியைத் தடுத்து நிறுத்துமாறும் இதன்போது கிராமமக்களால் கோரிகை விடுக்கப்பட்டது.

இந்நிலையில் மக்களின் முறையீடுகளை நன்கு செவிமடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலருக்கு தொலைபேசி அழைப்பெடுத்து கலந்துரையாடினார். கற்குவாரியின் பாதிப்பு நிலைமைகளை ஒட்டுசுட்டான் பிரதேசசெயலரிடம் சுட்டிக் காட்டினார்.

அத்தோடு ஏற்கனவே கடந்த ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக காதலியார் சம்மளங்குளம் கிராமத்தில் கற்குவாரி அமைக்க அனுமதி வழங்கப்படக்கூடாதெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் பிரதேசசெயலாளரிடம் வலியுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில் –

மக்களுக்கு பல வழிகளிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற வகையில் காதலியார் சம்மளங்குளம் கிராமத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த கற்குவாரி மக்களின் எதிர்ப்பினால் மூடப்பட்டிருந்தது.

இந்நிலையில் கிராமமக்களின் அனுமதியின்றி, மீண்டும் இக்கிராமத்தில் கற்குவாரி ஒன்றினை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என மக்கள் முறையீடு செய்துள்ளனர்.

இவ்வாறு அடாவடித்தனமான முறையிலும், மக்களின் விருப்பிற்கு மாறாகவும் கற்குவாரி அமைத்து, இங்கு கல் அகழ்வுச. செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால் மக்களோடு இணைந்து வீதியில் இறங்கிப் பாரிய போராட்டத்தில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படுமென உரியவர்களை எச்சரிக்கின்றேன்.

ஏற்கனவே இங்கு கற்குவாரி அமைக்கப்பட்டதால் ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து, மக்களால் இதுவரை மீளமுடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே இங்கு மீண்டும் கற்குவாரியை அமைப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

கடந்த ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் கற்குவாரி அமைக்க அனுமதி வழங்க முடியதென்றே தீர்மானிக்கப் பட்டது.

இந்நிலையில் இதுதொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலரிடமும் இது குறித்து கலந்துரையாடியுள்ளேன். கடந்த பிரதேச அபிவிருத்திக்குழுவின் தீர்மானத்தை உரிய இடங்களுக்குஅனுப்பிவைத்துள்ளதாகத்தெரிவித்தார். அத்தோடு கற்குவாரி அமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாதெனவும் பிரதேசசெயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த விடயம் தொடர்பில் உரிய இடங்களில் கலந்துரையாடுகின்றமையுடன், மக்களுக்குப் பாதிப்பான இந்த கற்குவாரி அமைப்பதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சியை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தீவிரம் காட்டி வந்த போது, அதற்கு எதிராக ஆரம்பத்தில் கிண்டல் கருத்தைக் கூறியவர் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா இராமநாதன்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரமுகர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் செல்வராஜா கஜேந்திரனும் அரசியலுக்கு இந்த நடிப்பு நடிக்கின்றனர், துணிவிருந்தால் கடப்பாரையைக் கொண்டு வாருங்கள், நானும் வருகிறேன், சேர்ந்து தையிட்டி விகாரையை இடிப்போம் என்று ஒரு நேரத்தில் விதண்டாவாதம் பண்ணிய அருச்சுனா, இப்போது அவர்கள் மக்களைத் திரட்டி தையிட்டி விகாரையை உடைக்க போகின்றார்கள் என்று மறுவளத்தால் சண்டப் பிரசண்டம் பண்ணுகிறார். தமிழர்களின் நியாயமான போராட்டத்துக்கு எதிராக தென்னிலங்கையை உசுப்பி விடுகின்றார். அதில் ஆச்சரியமில்லை. ஏனெனில் சணம் பித்தம், சணம் வாதம் என்பதுதான் அவரது தலைப்போக்கு. அது மாத்திரமல்ல, அப்படிக் கோடாரிக் காம்புத்தனம் பண்ணுவதற்காகத்தான் யாழ்ப்பாண வாக்காளர்கள் ஒரு பகுதியினர் சேர்ந்து குசும்பு பண்ணி அவரை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தனர். அதனால் அவர் அப்படித்தான் செய்வார். அம்பை நொந்து பயனில்லை. எய்த யாழ்ப்பாண வாக்காளர்கள்தான் இந்தத் தற்குறித்தனத்துக்குப் 'பெருமைப்பட' வேண்டும்.

அப்படி தமிழ் மக்களின் தையிட்டிப் போராட்டத்திற்கு தவறான நோக்கமும் அர்த்தமும் கொடுத்து தன்னுடைய பரவணிப் புத்தியை அருச்சுனா இராமநாதன் வெளிப்படுத்திய பின்புலத்தில் இன்றைய போராட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

இந்தப் போராட்டத்தில் தான் பங்குபற்றுவதற்காகவே இன்று நடைபெறுகின்ற தமது கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தை இன்று காலையில் வைப்பதற்கு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் இணக்கம் தெரிவிக்கவில்லை. அதனால் அந்தக் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு வவுனியாவில் நடைபெறுகின்றது.

இன்று காலையில் நடைபெறும் தையிட்டிப் போராட்டம் போலவே இன்று பிற்பகல் வவுனியாவில் நடைபெறும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டமும் அரசியல் ரீதியில் முக்கியத்துவம் பெறுகின்றது.

அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்திருக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்றீடான சட்டமூலம், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு என்ற பெயரில் அரசு நகர்த்தும் நாடாளுமன்ற தெரிவுக்குழு என்ற இழுத்தடிப்பு நாடகம், அரசமைப்புக் கவுன்ஸிலில் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதியின் நடத்தை போன்றவை எல்லாம் இன்றைய தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் முக்கிய இடத்தைப் பெறும் என்று தெரிகிறது.

இந்த இரண்டு அரசியல் நிகழ்வுகளும் – தையிட்டிப் போராட்டமும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டமும் – இன்றைய நிலையில் அரசியல் திருப்பு முனைகளைப் புதிதாகத் தந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

## மாகாணத் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருப்பினும் மாகாண சபைத் தேர்தலை தொடர்ந்து பிற்போடுவதற்கு அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (மொட்டுக் கட்சியின்) பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

அரசமைப்பின் பிரகாரம் உரிய காலத்தில் நடத்தப்படவேண்டிய மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்குநல்லாட்சிஅரசாங்கத்தின் அரச தலைவர்களும், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியும் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தரப்பினரும் பொறுப்புக்கூற வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் எமது அரசியல் எழுச்சி மற்றும் செல்வாக்கை கண்டு அச்சமடைந்தே மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் திட்டமிட்ட வகையில் நெருக்கடி ஏற்படுத்தப்பட்டு எந்தத் தேர்தல் முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவது என்ற சிக்கல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ராஜபக்ஷக்கள் வெற்றியோ அல்லது தோல்வியோ உரிய காலத்தில் தேர்தலை நடத்தியுள்ளார்கள். இதனை எவராலும் மறுக்க முடியாது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் படுத்தோல்வியடைய வேண்டும் என்பதை நன்கு அறிந்தே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாகாண சபைத் தேர்தலை நடத்தினார்.

இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம். தேர்தலுக்கு நாங்களும் தயாராக இருக்கிறோம். இருப்பினும் அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் விடுவதற்கு பல்வேறு வழிமுறைகளில் முயற்சிக்கிறது. – என்றார்.

## அரசு தனக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கண்டியில் உள்ள ஸ்ரீதலதா மாளிகைக்குச் சென்று வழிபட்ட பிறகு, ஊடகங்களுக்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ராஜபக்ஷ, யதார்த்தமான திட்டமிடல் இல்லாமல் ஜனாதிபதி அளித்த வரம்பற்ற வாக்குறுதிகள் தொடர்பில் பொதுமக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர் என்றார்.

நிலைமையைசரியாகமதிப்பிடாமலோ அல்லது தொடர்புடைய அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்காமல. பேரிடரால் பாதிக்கப்பட்டதரப்புகளைதிருப்திப்படுத்தஜனாதிபதி உறுதிமொழிகளை அள்ளி வீசி, வாரி வழங்கினார் என அவர் குற்றம் சாட்டினார்.

"எடுத்துக்காட்டாக, வீட்டை இழந்த ஒருவருக்கு ஜனாதிபதி ஆரம்பத்தில் ஐம்பது லட்சம் ரூபா இழப்பீடு வழங்குவதாக உறுதியளித்தார். இருப்பினும், இப்போது கிடைக்கும் உண்மையான தரவுகளுடன், அந்தத் தொகை சுமார் ஐந்து லட்சம் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது" என்று நாமல் கூறினார்.

வாக்குறுதிகள் துல்லியமான தகவல்களின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் என்றும், அவற்றை நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதியின் சில அறிக்கைகள் சரியான அடிப்படையின்றி வெளியிடப்பட்டன. முக்கியமாக பொதுமக்களின் அழுத்தத்தைக் குறைக்கும் நோக்கத்திற்காக அப்படிச் செய்யப்பட்டது. இது மக்களிடையே நம்ப முடியாத எதிர்பார்ப்புகளுக்கு வழிவகுத்தது என்றும் அவர் மேலும் குற்றம் சாட்டினார்.

"எமது மொட்டுக் கட்சி அரசாங்கத்தை வீழ்த்தவில்லை. தற்போதைய அரசாங்கம் அதைத் தானே செய்து வருகிறது. எதிர்க்கட்சியின் பங்கு மக்களுடன் நிற்பது மட்டுமே. அதே நேரத்தில் அரசாங்கம் தன்னைத்தானே கவிழ்க்க திறம்பட முயற்சிக்கிறது" – என்று அவர் மேலும் கூறினார்.

## ஐ.தே.க. - ஐக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் இணைவை முழு நாடும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இதற்கான முழுமையான பொறுப்பு மற்றும் அதிகாத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் முகாமைத்துவக் குழு கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆசீர்வாதத்துடன் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிநிதிகள் நேர்மறையான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளனர்.

அந்த வகையில் வெகு விரைவில் ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசிய கட்சியும் ஒன்றிணையவுள்ளன என்பதை புத்தாண்டு சுப செய்தியாகக் கூறிக் கொள்கின்றேன். எமது கட்சியில் 99 சதவீதமானோர் இது நடக்க வேண்டும் என்று பிரார்த்தித்தோம்.

அரசாங்க தரப்பில் இதனை தாங்கிக் கொள்ள முடியாதவர்களும் உள்ளனர். நாட்டில் அடுத்ததாக மாகாணசபைத் தேர்தல் நடைபெற வேண்டியுள்ளது. உடனடியாக அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும்போதுஎமதுஇருகட்சிகளினதும்இணைவின் ஊடாக அரசாங்கத்துக்கு எதிரான பலத்தைக் காண்பிப்போம்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆசீர்வாதத்துடன், சஜித் பிரேமதாஸவின் தலைமைத்துவத்தின் கீழ் உருவாகும் இந்த பாரிய அரசியல் கூட்டணி நாட்டுக்கு மிகவும் தீர்க்கமானதொரு அரசியல் முகாமாக அமையும். அதனை வெற்றியடைச் செய்வதற்கு உண்மையுடன் இணையுமாறு நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

அதேவேளை அரசாங்கத்திடமும் சில கோரிக்கைகளை முன்வைக்கின்றோம். கடந்த ஆண்டு ஜனவரியில் சோதனைகளின்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள், தரம் 6 ஆங்கில பாடப்ரப்பில் உள்ளடக்கப்பட்ட சர்ச்சைக்குரிய இணையதள முகவரி, தித்வா புயல் தொடர்பில் அறிந்திருந்தும் நடவடிக்கை எடுக்காமை, முன்னாள் சபாநாயகர் ரன்வலவின் பட்டப்படிப்பு சான்றிதழ் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இவ்வாண்டிலாவது நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். – என்றார்.



# கல்வியங்காட்டில் ஐயப்ப கோவில் பால்குடப் பவனி

கல்வியங்காடு காளிகாதேவி சமேத வீரபத்திர சபரீச ஐயப்ப கோவில் பால் குடப் பவனி நேற்று இடம்பெற்றது.

சட்ட நாதர் சிவன் கோவிலில் ஆரம்பித்த பால் குட பவனி ஊர்வலமாக கல்வியங்காடு காளிகாதேவி சமேத வீரபத்திர சபரீச ஐயப்ப கோவிலை சென்றடைந்தது.

மங்கல வாத்தியங்கள் முழங்கப் பெருமளவான பெண்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற பால் குட பவனியில் இணைந்தனர்.

அதனை தொடர்ந்து ஐயப்பனுக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்றது.













# தம்பலகாமம் அரபா நகர் பள்ளிவாயலில் கடமை புரிபவரையும் தாக்கியது குரங்கு

திருகோணமலை தம்பலகாமம் அரபா நகரில் பள்ளிவாயலில் கடமை புரியும் முஅத்தின் நேற்று குரங்கு தாக்குதலுக்கு உள்ளானார்.

பள்ளியில் தூங்கி கொண்டிருந்த போது குரங்கு கடித்து குதறியுள்ளது. அவர் கிண்ணியா தளவைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார் என பள்ளி நிருவாக சபை தெரிவித்துள்ளது.

இந்தப் பகுதியில் ஓரிரு நாப்களுக்கு முன்னர் இதே குரங்கு அப்பகுதியை



சேர்ந்த 12 வயதுச் சிறுவன் ஒருவனையும் கடித்துத் தாக்கியுள்ளது.

இதுகுறித்துவனஜீவராசிகள்திணைக்களத்துக்கு அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான தொடரான தாக்குதல் காரணமாக அப்பகுதிக்கு சென்று மதக் கடமைகளை நிறைவேற்ற முடியாதுள்ளதாகவும் நடமாட முடியாதுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தேர்தலுக்கு அஞ்சும் அரசு

தொத்துப் பொறியில் கிடைத்த ஜனாதிபதித் தேர்தல் வெற்றியை அடுத்து, பொதுத் தேர்தலில் அமோக வெற்றி கிட்டிய போது, மலைத்துப் போன தேசிய மக்கள் சக்தி, பெரும் எடுப்பு எடுக்கத் தொடங்கியது என்பது உண்மைதான். ஆனால் அதன் பின்னர் உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் கொடுத்த பின்னடைவுப் பெறுபேறு தேர்தலைக் கண்டு அஞ்சும் ஒரு நிலையை ஆளும் தரப்புக்கு ஏற்படுத்திவிட்டது.

தாங்கள் அதிகாரத்துக்கு வந்தால், ஒரு வருடத்துக்குள் உள்ளூராட்சி தேர்தலையும் மாகாண சபைத் தேர்தல்களையும் நடத்தி முடிப்போம் என்று இந்தத் தேர்தல்கள் எல்லாவற்றுக்கும் முன்னர் ஆரவாரமாக வாக்குறுதி கொடுத்திருந்தது தேசிய மக்கள் சக்தி.

அப்போது இப்படி வாக்குறுதி கொடுத்த காலத்துக்கும், இப்போதைய நிலைமைக்கும் இடையில் சட்டரீதியாக புதிய நிலைப்பாடுகள் ஏதும் உருவாகி விடவில்லை. ஜனாதிபதித் தேர்தல் காலத்தை ஒட்டி தேசிய மக்கள் சக்தி வாக்குறுதி அளித்த போதிருந்த சட்ட நிலைமைகள்தான் இப்போதும் தொடர்ந்து நீடிக்கின்றன.

அப்படி இருந்தும், அதிகாரத்துக்கு வந்து ஒரு வருடம் கடந்தும், வாக்குறுதி அளித்தபடி இன்னும் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு முற்படவில்லை. மாறாக, அதை நிரந்தரமாக இழுத்தடிப்பதற்கான புதிய வியாக்கியானங்கள் அரசு தரப்பால் இப்போது முன்வைக்கப்படுகின்றன.

மாகாண சபை தேர்தல் சட்டங்கள் குறித்து முடிவெடுப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவு குழு என்ற முடிவை இப்போது அரசு மக்களுக்குக் கொடுத்திருக்கின்றது. ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தி எதிரணியில் இருந்த போது இருந்த அதே நிலைமைதான் இப்போதும் மாகாண சபை தேர்தல் விடயத்தில் தொடர்ந்து நீடிக்கின்றது.

அப்போது - தேர்தல்களில் வென்றால் ஒரு வருடத்திற்குள் மாகாண சபை தேர்தலையும் நடத்துவோம் என்று வாக்குறுதி கொடுத்த காலத்தில் என்ன நிலைமை இருந்ததோ, அதே சட்ட நிலைமைதான் இப்போதும் நீடிக்கின்றது.

அப்படி இருக்க, இந்த மாகாண சபைத் தேர்தலை எப்படி நடத்துவது என்று ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவு குழு என்ற புதுக் கருத்தை அரசு மக்களுக்கு இப்போது கொடுத்திருக்கிறது. அரசின் அந்தக் கயிற்றை விழுங்கிக் கொண்டு மக்கள் வாளாவிருக்க வேண்டியதுதான்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைத்து, தேர்தலை எப்படி நடத்துவது என்று ஆராய்ந்து, முடிவு கண்டு, அதன்பின் எல்லை நிர்ணயம் செய்வதற்கு எல்லை நிர்ணய ஆணைக் குழு நியமித்து, அதிலும் ஆராய்ந்து, அதிலும் முடிவு செய்து, அதன் பின்னர் தேர்தலை எப்படி நடத்துவது என்று தீர்மானிக்கக் குறைந்தது இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகள் சென்று விடும்.

அரசின் உத்தேச திட்டத்தின்படி புதிய அரசமைப்பை தனது ஆட்சி காலத்தின் இறுதியில் அப்போது அரசு செய்ய வேண்டி இருக்கும். புதிய அரசமைப்பு வருவதால் மாகாண சபை தேர்தல் தேவையில்லை என்று அச்சமயத்தில் சொல்லி அந்தத் தேர்தலை முற்றாக இல்லாமல் செய்துவிடலாம்.

இதுதான் தேசிய மக்கள் சக்தி அரசு இப்போது மாகாண சபை தேர்தல் முறைமைகளை ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிக்க முடிவு என்று முன்னெடுக்கும் கபட நாடகத்தின் உள்ளார்ந்தம்.

மாகாண சபை தேர்தல் தமக்குச் சாதகமாக வராது என்ற அச்சத்தில் மூழ்கி இருக்கும் தேசிய மக்கள் சக்தி, அதனால் அந்தத் தேர்தலுக்கு நிரந்தரமாக ஆப்படிக்கும் நகர்வாகவே நாடாளுமன்றத் தெரிவுக் குழு என்ற விடயத்தை முன் தள்ளி இருக்கின்றது.

தப்பித்தவறி கிடைத்த மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடனான பொதுத்தேர்தல் வெற்றியை வைத்துக்கொண்டு, ஆட்சி அதிகாரத்தை முழு அளவில் ஆண்டு அனுபவித்து நீடிக்க ஜே.வி.பி. உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தி முடிவு செய்து விட்டமையை இந்த விடயங்கள் நமக்குப் புலப்படுத்தி நிற்கின்றன.



# ஏன் கொன்றார்கள்? 20 வருடம் கடந்தும் விடையற்ற வினா!

-எஸ்.கீதபொன்கலன்-

2006 ஆம் வருடம் ஜனவரி 2ஆம் திகதி மாலை 7.30 மணியில் இருந்து 9 மணி வரை திருகோண மலை ஒரு திகிலான அனுபவத்தைச் சந்தித்தது.

அன்று கடற்கரையில் பல இடங்களில் பல இளைஞர்கள் இருந்தார்கள். படுகொலையை கண்ட எத்தனையோ சாட்சிகள் இருந்தன.

கடற்கரையில் இருந்து கதைத்துக் கொண்டிருந்த அப்பாவி மாணவர்கள் ஐவரை எந்தக் காரணமும் இல்லாமல் வெறித்தனமாக கொன்றது விசேட அதி ரடிப்படை.

அடுத்த நாள் அதிகாலையில் திருகோணமலை வைத்தியசாலையின் பிரேத அறையில் தலை களில் துப்பாக்கி குண்டுகள் துளைக்கப்பட்ட அந்த உடல்கள் வைக்கப்பட்டிருந்தன.

அன்று முழு நகரமும் பேரதிர்ச்சியில் மூழ்கிப் போயிருந்தது. அதன் பின் பல்லாயிரக்கணக்கா னோரின் கண்ணீரில் இறுதிச் சடங்கு இடம்பெற் றது.

இதன் பின்னர் நீதி கேட்ட பெற்றோர்கள் மிரட் டப்பட்டார்கள். இந்த கொலை நிகழ்ந்து 31 ஆவது நாள் நிகழ்வில் கொலைக்கு எதிர்ப்பு தெரி வித்த பொது. வெளியில் கருத்து தெரிவித்த பௌத்த பிக்கு ஒருவர் அடுத்து வந்த சில தினங்களில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தக் கொலை தொடர்பான பல தகவல்களை தொடர்ச்சியாக எழுதிக் கொண்டிருந்த ஊடகவிய லாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த வழக்கை முன் எடுத்துச் சென்ற பெற் றோரில் ஒருவரான வைத்தியர் மனோகரன் அவர் கள் மிக மோசமாக மிரட்டப்பட்டார்.

சென்ற வருடம் இந்த வழக்கின் நிலையும் அடுத்த கட்டமும் தொடர்பாக மீண்டும் சர்வதேச மன்னிப்பு சபையிடம் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் பலர் பேசியிருந்தனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ , திருகோண மலையில் விசேட அதிரடிப்படைக்குப் பொறுப்பாக விருந்த பிரதி பொலிஸ் மா அதிபர் கொட்டகதெனிய என்று இதற்கு பொறுப்பு கூற வேண்டியவர்களின் பட்டியல் இன்று வரை நீள்கின்றது.

கடற்படையினர் சிலர் கைதாகி போதிய சாட்சி யம் இல்லை என்று விடுதலையாகியிருந்தனர்.

இலங்கை அரசின் கொலைகள் ஆயிரக்கணக் காக இருந்தாலும் இந்த கொடூரக் கொலை அரச கட்டுப்பாட்டுப் பகுதியில். யுத்தம் கூட இடம்பெறாத பகுதியில் இடம்பெற்றது.

இதற்கும் இன்றுவரை நீதி கிடைக்கவில்லை.

நீதிக்கான போராட்டத்தின் இறுதியில் கொலை யுண்ட மாணவன் ரஜீகரின் தந்தையான வைத் தியர் மனோகரன் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் இறந்து போனார்.

திருகோணமலை டொக்யார்ட் வீதி, பெரிய கடற்கரைச் சந்தியிலுள்ள காந்தி சிலைக்கு அருகா மையாக மாலைப் பொழுதில் தினமும் இளை ஞர்கள் நின்று கதைப்பது வழக்கம்.

02.01.2006 அன்றைய மாலைப் பொழுதும் மாணவர்கள் பலர் அவ்விடத்தில் கூடிநின்று கதைத் துக்கொண்டிருந்தனர்.அப்போது ஆட்டோ ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்கள் அந்த இளைஞர் கள் மீது கைக்குண்டை வீசிவிட்டுக் கோட்டைப் பக்கமாகச் சென்றனர். கைக்குண்டு வெடித்ததில் திருமலை புனிதஜோசப் கல்லூரி மாணவரான யோகராஜா பூங்குழலோன் என்பவர் காயமடைந் தார். இவரை ஏனைய மாணவர்கள் வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல முற்பட்டபோது அப் பகுதிக்கு வந்த விசேட அதிரடிப் படையினர் அங்கு சுமார் 10 நிமிடங்கள் வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் கடற்கரையில் நின்ற மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடத்தொடங்கினர். இதற்கிடையில் காயமடைந்த மாணவர்களுக்கு அருகில் விரைந்த படையினர் அவர்களை நிலத்தில் விழுத்தி கண்மூடித் தனமாகத் தாக்கினர். மாணவர்கள் இச்சம்பவம் பற்றி தமக்கு ஏதும் தெரியாது எனக் கூறியபோதும் மாணவர்களைச் சப்பாத்துக் கால்களால் மிதித்து முழங்காலில் நிற்க வைத்துச் சுட்டுக் கொன்றனர் என்பதற்குக் கண்கண்ட சாட்சிகள் உள்ளன. இத் தகைய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் 05 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 05 மாணவர்கள் படுகாயமடைந்திருந்தனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் விவரம்:

01. லோகிதராசா ரொஹான்
02. சண்முகராஜா சஜீந்திரன்
03. மனோகரன் ரஜீகர்
04. தங்கத்துரை சிவானந்தன்
05. யோகராஜா ஹேமச்சந்திரன்

ஏன் கொன்றார்கள்? என்று தெரியாமல் விடையற்ற நிலையில் 20 வருடங்கள் நேற்றுடன் கடந்து விட்டமைதான் மிச்சம்.



# திருமலையில் 5 மாணவர்கள் படுகொலை; இருபதாவது வருட நினைவேந்தல் நேற்று

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை கடற்கரையில் வைத்து படுகொலை செய்யப்பட்ட 5 மாணவர்களின் 20 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று மாலை அவர்கள் படுகொலை செய்யப்பட்ட திருகோணமலை கடற்கரையில் உள்ள காந்தி சிலைக்கு முன்பாக இடம்பெற்றது. இதன்போது படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் நிழற்படங்களுக்கு மலர்தூவி, விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

திருகோணமலை பிரதான கடற்கரை சந்தியிலுள்ள காந்தி சிலைக்கு அருகாமையாக மாலைப் பொழுதில் தினமும் இளைஞர்கள் நின்று கதைப்பது வழக்கம். 02.01.2006 அன்றைய மாலைப் பொழுதும் மாணவர்கள் பலர் அவ்விடத்தில் கூடிநின்று கதைத்துக்கொண்டிருந்தனர். அப்போது ஆட்டோ ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்கள் அந்த இளைஞர்கள் மீது கைக்குண்டை வீசி விட்டுக் கோட்டைப் பக்கமாகச் சென்றனர். கைக்குண்டு வெடித்ததில் திருமலை புனிதஜோசப் கல்லூரி மாணவரான யோகராஜா பூங்குழலோன் என்பவர் காயமடைந்தார். இவரை ஏனைய மாணவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முற்பட்டபோது அப்பகுதிக்கு வந்த படையினர் அங்கு சுமார் 10 நிமிடங்கள் வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் கடற்கரையில் நின்ற மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடத்தொடங்கினர். இதற்கிடையில் காயமடைந்த மாணவர்களுக்கு அருகில் விரைந்த கடற்படையினர் அவர்களை நிலத்தில் விழுத்தி கண்மூடித்தனமாகத் தாக்கினர். மாணவர்கள் இச்சம்பவம் பற்றி தமக்கு ஏதும் தெரியாது எனக் கூறியபோதும் மாணவர்களைச் சப்பாத்துக் கால்களால் மிதித்து முழங்காலில் நிற்க வைத்து சுட்டுக் கொன்றனர் என அக்காலத்தில் வெளிவந்த பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. இத்தகைய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் லோகிதராசா ரொஹுச்ன், சண்முகராஜா சஜீந்திரன், மனோகரன் வசீகர், தங்கத்துரை சிவானந்தன், யோகராஜா கேமச்சந்திரன் ஆகியோர் கொல்லப்பட்டிருந்தனர்.

அத்துடன் குறித்த படுகொலைச் சம்பவம் தொடர்பில் செய்தி செளியிட்டிருந்த சுகிர்தராஜன் என்ற ஊடகவியலாளரும் பின்னர் படுகொலை செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.









# 2025இல் ரூ.7,500 கோடிக்கும் அதிக மதிப்புள்ள போதைப் பொருள்களை மடக்கிய கடற்படையினர்

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

எதிர்கால சந்ததியினரை போதைப்பொருள் அச்சுறுத்தலில் இருந்து விடுவிப்பதற்காக செயல்படுத்தப்படும் 'முழு நாடுமே ஒன்றாக' என்ற தேசிய நடவடிக்கைக்கு சிறப்பு பங்களிப்பைச் செய்து வரும் இலங்கை கடற்படை, தீவின் கடலோரப் பகுதிகள் மற்றும் கடல் மண்டலங்களை உள்ளடக்கிய போதைப்பொருள் சோதனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கடல்சார் பங்குதாரர்கள் மற்றும் சட்ட அமலாக்க நிறுவனங்களுடன் கூட்டு அணுகுமுறையில் இது செயல்படுகிறது.

இதன் கீழ், கடந்த 2025 ஆம் ஆண்டில் கடற்படை நடத்திய நடவடிக்கைகளின் விளைவாக, 7,500 கோடி ரூபாவுக்கும் அதிகமான மொத்த மதிப்புள்ள ஹெராயின், ஐஸ், ஹஷிஷ், வெளிநாட்டு மற்றும் உள்ளூர் கஞ்சா, போதை மாத்திரைகள், வெளிநாட்டு சிகரெட்டுகள் மற்றும் பீடி இலைகள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் 376 உள்ளூர் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதன்படி, 2025 ஆம் ஆண்டில், மொத்த மதிப்பு ரூ.2520 கோடிக்கும் அதிகமான 1,050 கிலோகிராமை விட அதிகமான ஹெராயினும், மொத்த மதிப்பு ரூ.4,772 கோடிக்கும் அதிகமான 2982 கிலோகிராமை விட அதிகமான ஐஸ் (கிரிஸ்டல் மெத்தம்பேட்டமைன்) மற்றும் 11 உள்ளூர் படகுகள், கடற்படையால் கைப்பற்றப்பட்டு, மேலதிகசட்டநடவடிக்கைகளுக்காகஅனுப்பப்பட்டுள்ளன. 169 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

1,300 கோடி ரூபாவுக்கும் அதிகமான மதிப்புள்ள 5,768 கிலோகிராம்களுக்கும் அதிகமான வெளிநாட்டு கஞ்சா மற்றும் 19 உள்ளூர் படகுகளுடன் 73 உள்ளூர் சந்தேக நபர்களும் சிக்கினர்.

ஒரு கோடி 90 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான மொத்த மதிப்புள்ள 257 கிலோ கிராம்களுக்கும் அதிகமான உள்ளூர் கஞ்சாவுடன் 11 சந்தேக நபர்களும் –

ஒரு கோடி 68 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான மொத்த மதிப்புள்ள 16,83,722 போதை மாத்திரைகள் மற்றும் 04 உள்ளூர் படகுகளுடன் 16 சந்தேக நபர்களும் –

பத்துக் கோடி ரூபாவுக்கும் அதிக மொத்த மதிப்புடைய 33 கிலோ கிராம்களுக்கும் அதிகமான ஹஷிஷ் போதைப்பொருளுடன் ஏழு சந்தேக நபர்களும் –

4 கோடி 20 லட்சம் ரூபாவுக்கு மேல் மொத்த மதிப்புள்ள 4,20,385 வெளிநாட்டு சிகரெட்டுகள் மற்றும் 03 உள்ளூர் படகுகளுடன் 36 சந்தேக நபர்களும் –

4 கோடி 70 லட்சம் ரூபாவுக்கு மேல் மொத்த மதிப்புள்ள 67, 200 கிலோ கிராம்களுக்கும் அதிகமான பீடி இலைகள் மற்றும் 64 உள்ளூர் படகுகளுடன் 64 சந்தேக நபர்களும் –

2025 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சோதனைகளின்போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் சிறப்புப் பங்களிப்பைச் செய்வதோடு மட்டுமல்லாமல், எதிர்கால சந்ததியினரை போதைப் பொருள் அச்சுறுத்தலில் இருந்து விடுவிப்பதற்காக செயல்படுத்தப்படும் "முழு நாடுமே ஒன்றாக" என்ற தேசிய நடவடிக்கைக்கு பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை கடற்படை தொடர்ந்து பங்களிக்கும் எனவும் கடற்படை தெரிவித்துள்ளது.







# ‘Rebuilding Sri Lanka’ நிதியத்திற்கு நன்கொடை வழங்கிய முப்படை

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களின் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்தவும் நாட்டை மீண்டும் கட்டியெழுப்பவும் ஆரம்பிக்கப்பட்ட ‘Rebuilding Sri Lanka’ நிதியத்திற்கு இலங்கையின் முப்படைகளும் 372 மில்லியன் ரூபாவுக்கும் அதிக தொகையை நன்கொடையாக வழங்கியுள்ளன.



இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையின் அனைத்து தரநிலை உத்தியோகத்தர்களும் தங்களின் ஒருநாள் சம்பளத்தை இதற்கு நன்கொடையாக கொடுத்துள்ளனர்.

இதற்காக இலங்கை இராணுவத்திலிருந்து 250 மில்லியன் ரூபாவும் இலங்கை கடற்படையிடமிருந்து 73 மில்லியனைவிட அதிக தொகையும் இலங்கை விமானப்படையிடமிருந்து 49 மில்லியன் ரூபாவும் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான காசோலைகள் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமநாயக்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கல்வி அமைச்சின் பணிக்குழாம் அதிகாரிகளின் 2 நாட்கள் சம்பளமும் ஏனைய ஊழியர்களின் ஒரு நாள் சம்பளமும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குவதற்காக அரசாங்கத்தின் ஊடாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நிதியத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.






# லிட்ரோ எரிவாயு விலை தொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமை தீர்மானம்

லிட்ரோ சமையல் எரிவாயு விலைத் திருத்தம் தொடர்பான தீர்மானம் எதிர் வரும் திங்கட்கிழமை அறிவிக்கப்படு மென லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரி வித்துள்ளது.

இதனிடையே, நேற்று முன்தினம் முதல் அமுலாகும் வகையில் லாஃப் சமையல் எரிவாயுவின் விலைகள் அதிக ரிக்கப்பட்டுள்ளன.

12.5 கிலோகிராம் லாஃப் சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் விலை 150 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 4250 ரூபாவாகும். 05 கிலோகிராம் லாஃப் சமையல் எரி வாயு சிலிண்டரொன்றின் விலை 65 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 1710 ரூபாவென லாஃப் நிறுவனம் அறிவித்துள்ளது.

# இலஞ்ச, ஊழல் தொடர்பில் 76 அரச அதிகாரிகள் கைது

கடந்த ஆண்டில் 76 அரச அதிகா ரிகள் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச் சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவினால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடையே அதிகளவிலானோர் பொலிஸ் அதிகா ரிகள் என ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

அந்த எண்ணிக்கையில் 24 பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ள னர்.

119 சுற்றிவளைப்புகளில் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்ட னர்.

இதனிடையே, குறித்த காலப்பகுதிக் குள் ஊழல் மற்றும் மோசடி குற்றச் சாட்டுகளில் 07 அரசியல்வாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என இலஞ்ச விசாரணை ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

இந்த 11 மாத காலப்பகுதிக்குள் 7811 முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.









# வீட்டுத் திட்டங்களை உரிய காலத்துக்குள் நிறைவு செய்யுமாறு ஜனாதிபதி பணிப்புரை

2026 ஆம் ஆண்டு வரவு – செலவு திட்டத்தின் கீழ் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள அனைத்து வீட்டுத் திட்டங்களையும் உரிய காலத்துக்குள் நிறைவு செய்து மக்களிடம் ஒப்படைக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அந்தத் திட்டங்களின் செயல்பாடுகளை ஒரே நிறுவனத்தின் கீழ் மேற்பார்வை செய்யுமாறும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

தமக்கென ஒரு இடம், அழகான வாழ்க்கை தேசிய வீட்டுத்திட்டம் உள்ளிட்ட ஏனைய வீட்டுத் திட்டங்கள் குறித்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனை வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் கடந்த ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டு இன்னும் முடிக்கப்படாத வீட்டுத் திட்டங்களை விரைவாக முடிப்பது குறித்தும், இந்த சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.







# தரம் 6 ஆங்கில புத்தக சர்ச்சை; தவறைத் திருத்த புதிய திட்டம்


தேசிய கல்வி நிறுவனத்தினால் அச்சிடப்பட்ட 6ஆம் தர ஆங்கிலப் பாடப் புத்தகத்தில் எழுந்துள்ள சர்ச்சை தொடர்பாக, கல்விப் பொதுத்தராதர நிபுணர்களுடன் தற்போது தீவிர ஆலோசனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய பக்கத்தை நீக்கிய பின்னர், அவ்விடத்தில் புதிய திருத்தப்பட்ட பக்கத்தை அச்சிட்டு இணைப்பதா அல்லது மாற்று ஏற்பாடுகளைச் செய்வதா என்பது குறித்து மூன்று திட்டங்கள் ஆலோசிக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க கலுவெவ தெரிவித்துள்ளார்.


மேலும், பாடப்புத்தகத்தின் உள்ளடக்கத்திற்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும், அரசாங்கத்திற்கு ஏற்படும் மேலதிக செலவுகளைக் குறைக்கும் வகையிலும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவுள்ளதுடன், இது தொடர்பில் அரச அச்சகக் கூட்டுத்தாபனம் மற்றும் புத்தக வெளியீட்டுத் திணைக்களத்துடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலைகளுக்குப் புத்தகங்களை விநியோகிப்பதற்காக, ஜனவரி மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் இப்பிரச்சினைக்குச் சுமூகமான தீர்வு எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், தரம் 6 மாணவர்களுக்காக சுமார் 350,000 புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன. இதற்காக 6 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. எனவே, முழுப் புத்தகத்தையும் மீண்டும் அச்சிடப் போவதில்லை எனவும், பிரச்சினைக்குரிய பக்கத்தை மாத்திரம் அகற்றிவிட்டு நிபுணர்களின் ஆலோசனைப்படி குறித்த விடயத்திற்கு தீர்வு காணப்படும் எனவும் கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.



# ‘டித்வா’ சூறாவளி துயரத்துக்கு மத்தியிலும் மின் கட்டண அதிகரிப்புக்கு சஜித் எதிர்ப்பு



“டித்வா” சூறாவளியினால் லட்சக்கணக்கான மக்கள் நிர்க்கதியாகியுள்ள நிலையில், அரசாங்கம் மின்சாரக் கட்டணத்தை 11.57 வீதத்தினால் அதிகரிக்கத் தயாராகி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சுபீட்சமான தேசத்தையும் சிறந்த வாழ்க்கையையும் கட்டியெழுப்புவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம், இன்று மக்களை ஏழ்மைக்கும் சொல்லொணாத்துயரத்திற்கும் தள்ளிக்கொண்டிருப்பதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

எதிர்க்கட்சியில் இருந்தபோது மேடைகள்தோறும் மின்சாரக் கட்டணத்தை 33 வீதத்தினால் குறைப்போம் என வாக்குறுதி அளித்ததை அவர் நினைவு கூர்ந்தார்.

9,000 ரூபா மின்சாரப் பட்டியலை 6,000 ரூபாவாகவும், 3,000 ரூபா பட்டியலை 2,000 ரூபாவாகவும் குறைப்போம் என உறுதியளித்துவிட்டு, இன்று மக்கள் வழங்கிய ஆணையைத் மறந்து மின்சாரக்கட்டணத்தை 11.57 வீதத்தினால் உயர்த்தத் திட்டமிடுகின்றனர் என அவர் குறிப்பிட்டார்.

மேலும், ஜனாதிபதி பகிரங்கமாக வழங்கிய வாக்குறுதியை நம்பியே மக்கள் இந்த அரசாங்கத்திற்கு வாக்களித்தனர். ஆனால் இன்று அந்த நம்பிக்கையைத் துரோகம் செய்து, மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறும் வகையில் அரசாங்கம் செயற்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மக்கள் நலனுக்காக மாற்றியமைப்போம் என்று கூறியவர்கள், இன்று எவ்வித மாற்றமுமின்றி அந்த ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தி மக்கள் மீது பாரிய அழுத்தங்களைப் பிரயோகிப்பதாகக் கூறினார்.

சூறாவளியினால் பாதிக்கப்பட்டு இன்னலுறும் மக்கள் மீது மேலுமொரு சுமையை ஏற்றாது, மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கும் திட்டத்தைக் கைவிட்டு, ஏற்கனவே உறுதியளித்தபடி 33 வீதத்தால் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

மக்கள் ஆணையை மீறிச் செயற்படும் இந்த அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் ஓரணியில் திரள வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

# தையிட்டி கவனவீர்ப்பு போராட்டத்துக்கு பேசும் மக்கள் அணிதிரள வேண்டும்

## வேலன் சுவாமிகள் அழைப்பு



தையிட்டி கவனவீர்ப்பு போராட்டத்தில் உறவுகள் அனைவரும் கட்சி, அரசியல், சமய, பிரதேச பேதங்கள் கடந்து தமிழர்களாக தமிழ் பேசும் மக்களாக அணிதிரள வேண்டும் என்று பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் சார்பில் தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இன்றைய தினம் சனிக்கிழமை தையிட்டி காணி உரிமையாளர்களினால் அழைப்பின் பெயரில் பாரிய கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது. தனியார் காணிகளை பலவந்தமாக ஆக்கிரமித்து கட்டப்பட்டிருக்கும் விகாரை அகற்றப்பட்டு மக்களுடைய காணிகள் மக்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்ற நீதிக்கான போராட்டத்தில் உறவுகள் அனைவரும் கட்சி, அரசியல், சமய, பிரதேச பேதங்கள் கடந்து தமிழர்களாக தமிழ் பேசும் மக்களாக அனைவரும் அணிதிரள வேண்டும்.

தமிழர்களாகிய நாங்கள் போராடித்தான் எதனையுமே பெறமுடியும் என்பது எழுதப்படாத விதியாக அமைந்துவிட்டது. அந்தவகையில் இன்றைய போராட்டம் எவ்வளவு எழுச்சியாக நடைபெறுகிறதோ அந்த அளவுக்கு அந்த நில ஆக்கிரமிப்புகளையும் பௌத்த ஆக்கிரமிப்புகளையும் நாங்கள் தடுத்து நிறுத்த முடியும்.

தையிட்டிக்காக போராடிக்கொண்டிருக்கக் கூடிய இன்றைய காலகட்டத்திலேயே வவுனியா சமணங்குளமாக இருக்கலாம், திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்றாக இருக்கலாம், வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் தொல்பொருள் திணைக்களம் பௌத்த சின்னங்கள் என்ற பெயரில் கட்டுக்கதைகளை புனைகதைகளை உருவாக்கி அவற்றின் ஊடாக எங்களுடைய காணிகளை கையகப்படுத்தி பௌத்த விகாரைகளையும் பௌத்த சின்னங்களையும் நிறுவி சிங்கள பௌத்த நாடாக இந்த நாட்டை மாற்றுகின்ற திட்டம் மிகவும் வேகமடாக நடந்துகொண்டிருக்கிறது.

யார் ஆட்சிக்கு வந்தாலும் அந்த அடிப்படைக் கொள்கையில் மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறார்கள். அநுர அரசு கூட அந்த நிலைப்பாட்டிலேயே தெளிவாகவும் உறுதியாகவும் உள்ளது என்பதனை அண்மைய சம்பவங்கள் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

ஆகவே இவற்றை எதிர்ப்பதற்கு தமிழர்களாக நாங்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். அந்த அடிப்படையில் இன்று காலையில் தையிட்டிக்கு திரண்டு வந்து உங்கள் வரலாற்று கடமையை செய்யுமாறு எமது உறவுகளை கேட்டுக்கொள்கின்றேன்.” என்று தெரிவித்தார்.

# பாடசாலை நேரம் தொடர்பில் கல்வியமைச்சு புதிய அறிவிப்பு

அரசாங்கத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் புதிய கல்விச் சீர்திருத் தங்களுக்கு இணங்க, 2026ஆம் ஆண்டிற்கான பாடசாலை கால அட்ட வணையைத் திருத்துதல் மற்றும் கல்வி சார் ஊழியர்களை (ஆசிரியர்களை) பயன்படுத்துதல் தொடர்பான புதிய வழி காட்டல்களையும் அறிவுறுத்தல்களை யும் கல்வி அமைச்சு வெளியிட்டுள் ளது.

இதற்கு முன்னர் பாடசாலை நிறை வடையும் நேரத்தை பி.ப. 2.00 மணி வரை நீடிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், தற்போது நிலவும் இயற்கை அனர்த்த நிலைமைகளைக் கருத்திற்கொண்டு அதனை நடைமுறைப் படுத்தாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 2026 ஆம் ஆண்டிலும் பாடசாலை நேரம் காலை 7.30 முதல் பி.ப. 1.30 வரை தற்போதுள்ளவாறே தொடரும்.

முக்கிய திகதிகள்:

தரம் 1 மற்றும் தரம் 6 தவிர மற்றைய அனைத்துத் தரங்கள்:

2026 ஆம் ஆண்டின் முதலாம் பாடசாலைத் தவணை ஜனவரி 05 ஆம் திகதி ஆரம்பமாகும்.

தரம் 6: கல்வி நடவடிக்கைகள் ஜனவரி 21 ஆம் திகதி ஆரம்பமாகும்.

தரம் 1: கல்வி நடவடிக்கைகள் ஜனவரி 29 ஆம் திகதி ஆரம்பமாகும்.

புதிய சீர்திருத்தங்களின் கீழ் பாடப் பரப்புகளைப் பூர்த்தி செய்வதற்காக, 2026 ஆம் ஆண்டின் முதலாம் தவணைப் பரீட்சையை நடத்தாமல், அந்த நேரத்தைக் கற்றல் நடவடிக்கைக ளுக்காகப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/17/03/01/01/01
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2026.01.02

සියලු ම පළාත් අධ්‍යාපන ලේකම්වරුන්
සියලු ම පළාත් අධ්‍යාපන අධ්‍යක්ෂවරුන්
සියලු ම කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂවරුන්
සියලු ම කොට්ඨාස අධ්‍යාපන අධ්‍යක්ෂවරුන්
සියලු ම පරිවේණාධිපති හිමිවරුන්
සියලු ම රජයේ හා රජයේ අනුමත පෞද්ගලික පාසල්වල විදුහල්පතිවරුන් වෙත

**නව අධ්‍යාපන ප්‍රතිසංස්කරණ යටතේ 2026 වසර සඳහා පාසල් කාලසටහන සංශෝධනය කිරීම සහ අධ්‍යයන කාර්ය මණ්ඩලය උපයෝජනය කිරීම පිළිබඳ උපදෙස් සංග්‍රහය**

මේ වන විට ඔබ වෙත යොමු කර ඇති චක්‍රලේඛ සහ උපදෙස් ලිපි මඟින් පාසල්වල 5 ශ්‍රේණිය සහ 6-13 ශ්‍රේණි සඳහා 2026 වර්ෂයේ නව පාසල් වාරය ආරම්භයේ සිට දෛනික ව පාසල් අවසන් කළ යුතු වේලාව ප.ව. 2.00 ලෙස දක්වා තිබුණ ද, රට තුළ පසුගිය දිනවල උද්ගත වූ ස්වභාවික ආපදා තත්ත්වය මත විශේෂයෙන් ම පළාත් කිහිපයක පාසල් පද්ධතියට මෙන් ම ප්‍රවාහන පද්ධතියට සිදු වූ දැඩි අලාභහානි හේතුවෙන්, පාසල් වේලාව දීර්ඝ කිරීම මගින් එම පළාත්වල පාසල් දරුවන්ට හා අනෙකුත් පාර්ශ්වයන්ට අපහසුතා රැසක් මතු විය හැකි බව නිරීක්ෂණය වේ. ඒ අනුව පාසල් පැවැත්වීමේ වේලාව දීර්ඝ කිරීමේ තීරණය 2026 වර්ෂය තුළ දී ක්‍රියාත්මක කරනු නොලැබේ.

2. 2026 වර්ෂයේ සිට හඳුන්වාදීමට අපේක්ෂිත නව අධ්‍යාපන ප්‍රතිසංස්කරණ ක්‍රියාත්මක කිරීමට සමගාමී ව පාසල්වල 6-13 ශ්‍රේණි සඳහා පාසල් කාලසටහන සකස් කිරීම සම්බන්ධයෙන් 2025.11.04 දිනැති ව නිකුත් කරන ලද චක්‍රලේඛ අංක 34/2025 සහ අංක ED/16/01/05/10/- II වෙළුම හා 2025.11.04 දිනැති 'නව අධ්‍යාපන ප්‍රතිසංස්කරණ ක්‍රියාත්මක කිරීමට සමගාමී ව ප්‍රාථමික අධ්‍යාපන අංශයේ පාසල් කාලසටහන සකස් කිරීමේ උපදෙස් ලිපිය' සහ 'මුස්ලිම් පාසල්වල 6-13 ශ්‍රේණි සඳහා කාලසටහන සකස් කිරීම' මැයෙන් යොමු කර ඇති අංක ED/09/55/02/11 හා 2025.12.16 දිනැති උපදෙස් ලිපිය, 'වැඩිදුර අධ්‍යයන මොඩියුල හා පරිවර්තනීය කුසලතා පිළිබඳ උපදෙස් සංග්‍රහය' මැයෙන් යොමු කර ඇති අංක ED/17/03/01/01/01 හා 2025.12.15 දිනැති ලිපිය හා 'පාසලක සිටිය යුතු අධ්‍යයන කර්යමණ්ඩලය නිර්ණය කිරීම' සඳහා වන 2021.04.28 දිනැති චක්‍රලේඛ අංක 6/2021 හා 2024.09.06 දිනැති චක්‍රලේඛ අංක 6/2021 (i) යන චක්‍රලේඛ වලට අමතර වශයෙන් මෙම උපදෙස් සංග්‍රහය නිකුත් කරනු ලැබේ. ඒ අනුව 2026 වසර තුළ දී පාසල් පැවැත්වෙන වේලාව දැනට ක්‍රියාත්මක වන පරිදි ම පෙ.ව. 7.30 සිට ප.ව 1.30 දක්වා පැවැත්වීමට තීරණය කර ඇත. මින් පෙර ලබා දුන් උපදෙස් පරිදි, නව අධ්‍යාපන ප්‍රතිසංස්කරණ ක්‍රියාවලිය 2026 වර්ෂයේ සිට 1 සහ 6 ශ්‍රේණි සඳහා ක්‍රියාත්මක කළ යුතු වේ.

# த.வெ.க. வில் இணைந்தார் முன்னாள் எம்.எ.ல்.ஏ. பிரபாகர்

அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ . ஜே.சி.டி பிரபாகர் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்துள்ளார். த.வெ.க. தலைவர் விஜய் முன்னிலையில் அவர் அந்தக் கட்சியில் ஐக்கியம் ஆனார்.

கடந்த 2011 சட்டப்பேரவை தேர்தலில் சென்னை – வில்லிவாக்கம் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் ஜே.சி.டி பிரபாகர். முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதாவின் நன்மதிப்பை பெற்றவர். அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் இடையே முரண்பாடு ஏற்பட்டபோது ஓ.பன்னீர்செல்வம் தரப்புக்கு ஆதரவாக செயல்பட்டார். இந்நிலையில், தற்போது த.வெ.கவில் அவர் இணைந்துள்ளார்.

“முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரை சந்தித்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சியை, தற்போது விஜய்யை சந்தித்தபோதும் பெற முடிந்தது. கட்சி பொறுப்பு ஏதும் இல்லாவிட்டாலும் மக்களுக்கு நல்லாட்சி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் த.வெ.கவில் இணைத்துள்ளேன்.

அ.தி.மு.க. ஒருங்கிணைப்புக்கு முயன்றேன். அது நடைபெறவில்லை. இனி அந்த முயற்சி வெற்றி பெறாது. வரும் நாள்களில் மேலும் பலர் த.வெ.கவில் இணைவார்கள். தமிழகத்தில் மக்களின் ஆதரவு விஜய்க்கு உள்ளது.” என்று பேட்டி



ஒன்றில் ஜே.சி.டி பிரபாகர் பேட்டி தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே, முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் செங்கோட்டையன், த.வெ.கவில் இணைந்தார். அதன் பின்னர் அ.தி.மு.க. முகாமில் இருந்து பலர் த.வெ.க. பக்கம் வருவார்கள் என அவர் சொல்லியிருந்த நிலையில், ஜே.சி.டி பிரபாகர் த.வெ.கவில் இணைந்துள்ளார். ஜே.சி.டி பிரபாகரின் மகன் அமலன், த.வெ.கவில் ஏற்கெனவே இணைந்து கட்சி பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் மோடி நடத்தும் தேர்வு கலந்துரையாடல்

## 3 கோடி பேர் முன்பதிவு

பொதுத்தேர்வு எழுதும் மாணவ, மாணவருக்கு பயனுள்ள ஆலோசனைகளை வழங்க பிரதமர் நரேந்திர மோடி, “பரீக்ஷா பே சர்ச்சா” (தேர்வு குறித்து விவாதம்) என்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியை நடத்தி வருகிறார்.

நடப்பு 2026 ஆம் ஆண்டுக்கான முன்பதிவு கடந்த டிசம்பர் 1 ஆம் திகதி தொடங்கியது. டிசம்பர் 30 ஆம் திகதி நிலவரப்படி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் என சுமார் 3 கோடி பேர் முன்பதிவு செய்துள்ளனர்.

எதிர்வரும் 11 ஆம் திகதி முன்பதிவு நிறைவடைகிறது.



# தமிழக மக்களுக்காக பேசும் காங்கிரஸ்காரர்கள் இல்லை

## அண்ணாமலை தெரிவிப்பு

“காங்கிரஸ் கட்சியினர் டில்லிக்கும், தி.மு.கவுக்கும் “ஜால்ரா“ போட்டு கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழக மக்களுக்காக பேசும் காங்கிரஸ்காரர்கள் யாரும் இல்லை.”

– இவ்வாறு தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வேலூரில் செய்தியாளர்களிடம் பேசும்போது,

“தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு பெண்களுக்கு எதிரான குற்றங்கள், கஞ்சா புழக்கம், வன்முறை அதிகமாகி இருக்கிறது.

கஞ்சா புழக்கத்தால் இளைஞர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், மடைமாற்றம் செய்வதற்கு, முதல்வர் மத்திய அரசின் மீது பழி போடும் விதமாக பேசிவருகிறார். வெளிநாட்டில் இருந்து வரும் போதைப் பொருளைத்தான் மத்திய அரசு தடுக்கும்.

‘நான் தமிழக முதல்வராக கஞ்சா புழக்கத்தை கட்டுப்படுத்துவதில் தோற்றுவிட்டேன்’ என முதல்வர் ஒப்புக்கொள்ளட்டும். அதை விடுத்து, சாக்குபோக்கு சொல்லிவிட்டு மத்திய அரசு மீது பழி போடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழகத்தில் இரண்டு குழுக்கள்தான் இருக்கிறது. ஒரு குழு டெல்லிக்கு ஜால்ரா அடிக்கிறது. மற்றொரு குழு முதல்வர் ஸ்டாலினுக்கு ஜால்ரா அடிக்கிறது. காங்கிரஸ் கட்சியின் கடையை சாத்தி விடலாம். அது அழிந்து வரும் கட்சி. அதற்கு தமிழக காங்கிரஸ் தலைவரே ஒரு சான்று.

ஒருவேளை விஜய்யுடன் காங்கிரஸ் கூட்டணி அமைத்தால், ப.சிதம்பரம் தனி கட்சி அமைத்து தி.மு.கவுடன் கூட்டணி வைப்பார். காலையில் தான் இது குறித்து ஒரு நாளிதழில் படித்தேன். இன்றைக்கு இருப்பது இந்திரா காங்கிரஸ்.

தூய்மை பணியாளர்கள், இடைநிலை ஆசிரியர்கள் என அனைவரும் போராட்டம் நடத்தி வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு கிடைத்த புத்தாண்டு பரிசு கைதுதான். ஆனால் முதல்வர் ஸ்டாலின் வேறு உலகத்தில் இருக்கிறார். தி.மு.க. ஆட்சி வேண்டாம் என மக்கள் நினைத்துவிட்டார்கள். மக்களே தெளிவான முடிவை தருவார்கள்.” என்று கூறினார்.






# புத்தாண்டில் ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் தாக்குதல் திட்டம் முறியடிப்பு

## அமெரிக்க அதிகாரிகள் அறிவிப்பு

அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாநிலத்தில் புத்தாண்டு தினத்தன்று ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினால் நடத்தப் படவிருந்த பாரிய பயங்கரவாதத் தாக் குதல் முயற்சி முறியடிக்கப்பட்டதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக, 18 வயது இளைஞன் ஒருவரைக் கைது செய்துள்ளதாக அமெ ரிக்காவின் மத்திய புலனாய்வுத் துறை தெரிவித்தது.

இந்தத் தாக்குதல் முயற்சியானது நேரடியாக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பி னால் ஈர்க்கப்பட்டு திட்டமிடப்பட்டதாக அமெரிக்காவின் மத்திய புலனாய்வுத் துறை தனது சமூக வலைத்தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளது.

எமது சிறந்த பங்காளிகளுடன் இணைந்து பணியாற்றியதன் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி பல உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன என அதன் பணிப் பாளர் காஷ் படேல் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள அந்த இளை ஞன், சுமார் ஒரு வருட காலமாக இந்தத் தாக்குதலுக்காகத் திட்டமிட்டு வந்துள்ள தாக அமெரிக்க சட்டத்தரணி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

கத்திகள் மற்றும் சுத்தியல்களைப் பயன்படுத்தி இந்தத் தாக்குதலை நடத்த அவர் திட்டமிட்டிருந்ததாக அந்த சட்டத் தரணி குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பாவில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். உறுப்பினர் ஒருவருடன் அவர் தொடர்பில் இருந்ததும், கறுப்பு நிற ஆடை அணிந்து சுத்தியல்களால் தாக்குதல் நடத்துமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்த தும் விசாரணையில் தெரியவந்துள் ளது.

சந்தேக நபரின் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையின் போது, “புத்தாண்டு தாக் குதல் 2026“ என்ற தலைப்பிலான கையெழுத்துப் பிரதி ஒன்றை அதி காரிகள் கண்டெடுத்தனர்.

அதில் 20 பேரை கத்தியால் குத்திக் கொல்லவும், சம்பவ இடத்திற்கு வரும் பொலிஸ் அதிகாரிகளைத் தாக்கவும் அவர் திட்டமிட்டிருந்ததாகக் குறிப்பி டப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பயங்கரவாத அமைப் புக்கு ஆதரவளிக்க முயன்றதாக அவர் மீது தற்போது குற்றம் சுமத்தப்பட்டுள் ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# ஓடுதளத்தை விட்டு விலகி ஓடைக்குள் பாய்ந்த விமானம்




நேபாளத்தின் பத்ராப்பூர் விமான நிலையத்தில் நேற்று தரையிறங்கிய புத்தா ஏர் நிறுவனத்திற்குச் சொந்த மான பயணிகள் விமானம் ஒன்று, ஓடு தளத்தை விட்டு விலகிச் சென்று விபத் துக்குள்ளாகியுள்ளது.

இந்த விமானத்தில் 51 பயணிகளும் நான்கு பணியாளர்களும் பயணித்துள் ளனர்.

அவர்கள் அனைவரும் எவ்வித காயங் களுமின்றி பாதுகாப்பாக உள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விமான கண்காணிப்புத் தரவுகளின் படி , இந்த விபத்துக்குள்ளான விமா னம் 9N-AMF இலக்கத்தைக் கொண்ட ATR 72-500 ரக டர்போபிராப் பயணிகள் விமானமாகும்.

விமானம் ஓடுதளத்தை விட்டு சுமார் 200 மீற்றர் தூரம் தாண்டிச் சென்று, அருகிலிருந்த ஒரு சிறிய ஓடைக்கு அருகில் நின்றது.

இந்தச் சம்பவத்தின் போது விமானத் திற்கு சிறிய அளவிலான சேதங்கள் ஏற் பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து ஆராயவும், முதலுதவி மற்றும் தொழில்நுட்ப உதவி களை வழங்கவும் காத்மண்டுவிலிருந்து தொழில்நுட்பக் குழுக்களும் மீட்புக் குழுக் களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 03.01.2025




இன்று சற்று மந்தமான நாள். இன்று சிறிது குழப்பத்துடன் காணப்படுவீர்கள். நெருங்கிய நண்பர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பது மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சி களில் கலந்து கொள்வது ஆறுதலை அளிக்கும்.

பணிகளில் இன்று மனநிறைவு காணப்படாது. உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்தநேரத் தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று குழப்பமான மனநிலை காணப்படும். இந்த உணர்வை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். எனவே உங்கள் துணையிடம் அமைதியான முறையில் நடந்து கொள்வதும் மகிழ்ச்சியாக இருப்பதும் சிறந்தது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.




இன்று வளர்ச்சி காணப்படும் நாள். சிறிதளவு முயற்சியில் அதிக வெற்றி காண்பீர்கள். இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

கடினமான பணிகளைக் கூடஎளிதாக ஆற்றுவீர்கள். உங்கள் உறுதி மற்றும் பொறுப்பு காரணமாக பணிகள் சுமூகமாக நடக்கும். திட்டமிடுவதன் மூலம் இது சாத்தியம்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள்.உன்கள் துணையை நட்கு புரிந்துகொண்டு நடந்து கொள்வீர்கள்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. எதிர்பாராத பண வரவுகள் இன்று சாத்தியம்.

என்னுடைய ஆரோக்கியம் சிறப்பாக உள்ளது என்னும் உங்கள் நம்பிக்கையே இன்று உங்கள் ஆரோக்கியத்தை பராமரிக்க உதவும்.




சுய முயற்சியில் நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்று காணப்படும் மகிழ்ச்சியும் திருப்தியும் உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்.

பணி வளர்ச்சி ஸ்திரமாக இருக்கும். உங்களுக்கு கூடுதல் பொறுப்புகள் வழங்கப்படும். நம்பிக்கையுடன் அதனை எற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் நகைச்சுவை உணர்வுடன் இருப்பீர்கள். எனவே செயல்கள் யாவும் சுமூகமாக நடக்கும். உங்கள் துணையும் உங்கள் அன்பை புரிந்துகொண்டு நடப்பார். இதனால் உறவில் திருப்தி நிலவும்.

இன்று உங்களிடம் கணிசமான தொகை காணப்படும். அந்தப் பணம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய் வதற்கு போதுமானதாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். யோகா அல்லது தியானம் மேற்கொள்வது சிறந்தது.




நல்ல சிந்தனை மூலம் சிறப்பான செயல்களுக்கு முயற்சி செய்வீர்கள். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும் சக பணியாளர்களுடன் சிறந்த முறையில் கலந்து பழகுவதன் மூலம் புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் தகவல் பரிமாற்றத் தில் இடைவெளி காணப்படும். இதனால் இருவருக்கும் இடையிலான புரிந்துணர்வு பாதிப்படையும். எனவே இதனை தவிர்க்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணம் சம்பாதிப்பது கடினமாக காணப்படும். சிறந்த முறையில் திட்டமிடுவது உதவிகரமாக இருக்கும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும். சளி மற்றும் நரம்பு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.




சில சமயங்களில் அமைதியின் மையை உணர்ந்தாலும் அறிவார்ந்த செயல்களை செய்யுங்கள். பொறுமை யான அணுகுமுறை மேற்கொண்டால் சிறந்தது.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது கவனமாக இருக்க வேண்டும். உங்கள் மேல–திகாரிகளுடன் சில விரும்பத்தகாத தருணங்களை சந்திக்க நேரும்.

சில குடும்ப பிரச்சினை காரணமாக உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்படும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வ தன் மூலம் இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி மற்றும் விறைப்புத் தன்மை உங்களுக்கு கவலையை அளிக்கும்.




உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக் கும். நீங்கள் உங்கள் நடவடிக்கை களை எளிதாக மேற்கொள்வீர்கள். இன்று அதிர்ஷ்டம் காணப்படும்.

பணியிடத்தில் நல்ல பலன்கள் காணப்படும். மேலதிகாரிகளின் ஆதர வைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வ தன் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவித்து மகிழலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். இந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு பயனுள்ள முதலீடுகளை செய்யுங்கள்.

ஆரோக்கியம் சிறந்த முறையில் இருக்கும். உடற் பயிற்சி மூலம் நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை தக்க வைக்கலாம்.




பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு மன ஆறுதலை அளிக்கும். விவேகமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பணிநிமித்தமான பயணம் காணப் படுகின்றது. சிறந்த திட்டமிடல் மூலம் ஆக்கபூர்வமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள துணையிடம் வன்மையாக நடந்து கொள வீர்கள். நல்லுறவை பராமரிக்க அத்தகைய வன்மை உணர்வை தவிர்ப்பது நல்லது.

பண வரவு சுமாராக இருக்கும். கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். செலவுகளை கட்டுபடுத்த வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோள்கள் மற்றும் கணுக்கால்களில் வலி ஏற்படலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




இன்று உறுதியுடன் இருக்க வேண் டிய நாள். நீங்கள் எடுக்கும் எந்த நட வடிக்கையையும் கவனமாக ஆற்றி னால் வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும். சக பணி யாளர்களுடன் அனுசரித்து செல்வதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

நீங்கள் இன்று அமைதியிழந்து உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். எனவே இதனை தவிர்த்து அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நீங்கள் பணத்தை இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாளவும்.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஒவ்வாமை ஏற்படுத்தும் உணவுகளை உட்கொள்ள வேண்டாம். மன உளைச்சலுக்கு இடம் அளிக்காதீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.01.2025




ஆன்மீக ஈடுபாடு நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். இதுவே உங்களின் எதிர்கால போக்காக ஆகிவிடும்.

உங்கள் வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும் சில தருணங்களைக் காண்பீர்கள். எனவே முன் ஜாக்கிரதையாக வழி-ப்புடன் அதனை எதிர்கொள்ளத் தயாராகுங்கள்.

உங்கள் துணையிடம் தேவையின்றி உணர்ச்சி வசப்படுவீர்கள். எனவே உங்களின் இந்தப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். செலவுகளை கட்டுபடுத்தும் வகைகளை கண்டறிய முயல வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உங்கள் பதட்டங்களை கட்டுப்படுத்தினால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் எந்த விஷயத்தையும் இன்று எளிதாக எடுத்துக் கொண்டு வெற்றி காண்பீர்கள். உங்கள் விருப்பங்கள் எளிதில் நிறைவேறும்.

பணியிடத்தில் முன்னணியில் இருப்பீர்கள். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நீங்கள் மற்ற ஜோடிகளுக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள்.

எதிர்பாராத பண வரவு காணப்படும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். கவனமாக திட்டமிட வேண்டும்.

இன்று பெரிய அளவில் ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. உடற்பயிற்சி மேற்கொண்டால் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்துக் கொள்ளலாம்.




இன்றையநாள்உற்சாகமானமகிழ்ச்சியான நாளாக இருக்கும்.எனவே மகிழ்ச்சியுடன் இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் முன்னேற்றங்கள் காணப்படும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

குடும்பத்தை அனுசரித்துப் போவதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கலாம். மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

இன்று உங்கள் சேமிப்பின் மூலம் பண வரவு காணப்படும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் உங்களை வருத்திக் கொள்ளாத வரையில் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். சிந்திப்பதை நிறுத்தி விட்டு செயல்களில் ஈடுபடுங்கள்.




இன்று நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். சுலோகம் சொல்வது மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் இது சாத்தியம்.

பணியிடத்தில் வளர்ச்சி சுமூகமாக இருக்காது. அதிகமான பணிகள் உங்களுக்கு கடினமாக இருக்கும்.

குடும்ப பிரச்சினை காரணமாக அமைதியின்மை காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். எனவே ஒன்றாக அமர்ந்து பேசி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தோள் வலி மற்றும் முதுகு வலி காரணமாக பதற்றம் ஏற்படலாம்.

# திருகோணமலை வீரநகரில் கடலரிப்பு அபாயம் நேரில் பார்வையிட்டார் அருண் ஹேமச்சந்திரா





**(எஸ்.கீதபொன்கலன்)**

கடலரிப்பினால் திருகோணமலை, வீரநகர் பகுதியில் உள்ள வீரநகர் அன்னை கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கக் கட்டடம் தாழிறங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வீரநகர் கடற்பகுதியில் தற்போது நிலவும் அதிக அலை எழுச்சி காரணமாக பெருமளவான கரையோரப் பகுதி கடலினுள் உள்வாங்கப்பட்டுள்ளது.

இதனால் அருகில் உள்ள கட்டடங்களும் ஆபத்தான நிலையில் உள்ளன.

அந்த வகையில் 2 வீடுகள் ஏற்கனவே தாழிறங்கி சேதமடைந்துள்ளன. வீரநகர் அன்னை கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கக் கட்டடத்தின் அத்திவாரப்பகுதிகளிலும் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் அந்தக் கட்டடம் தாழிறங்கும் அபாயத்தில் காணப்படுகின்றது.

இக்கட்டடம் மற்றும் ஏற்கனவே சேதமடைந்த வீடுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மீனவர் சங்கக் கட்டடமானது சுனாமி பேரழிவுக்குப் பின்னர் தன்னார்வ தொண்டர் நிறுவனம் ஒன்றினால் கட்டப்பட்டு வழங்கப்பட்டது. இது மீனவர்களுடைய உபகரணங்களை பாதுகாப்பதற்கும் மீனவர்கள் ஓய்வெடுப்பதற்கும் எனப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதற்கிடையில் –

திருகோணமலை வீரநகர் பகுதிக்கு நேற்று மாலை கள விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டமையோடு அப்பகுதி மக்களின் கருத்துகளையும் கேட்டறிந்தார். அவருடன் திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகத்தின் செயலாளர், கடல்வள பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள், அனர்த்த முகாமைத்துவ திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் பிரசன்னமாகியிருந்தனர்.